**திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை : திரு.க.சு.கந்தசாமி, இ.ஆ.ப.,**

ந.க.எண்.2738/2020/பஅ3 -2 நாள்: 07.07.2020

பொருள்: வன்கொடுமை தடுப்புச் சட்டம் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – திருவண்ணாமலை மாவட்டம் – செய்யாறு வட்டம் – புளியரம்பாக்கம் கிராமம் – திரு.மா.வெங்கடேசன், த/பெ.மாதவன் 24.07.2017 அன்று கொலை செய்யப்பட்டது. அவரது குடும்ப உறுப்பினரான சகோதரர் திரு.மா.ஆதிகேசவன், த/பெ.மாதவன் என்பவருக்கு வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 மற்றும் விதிகள் 1995ன்படி பாதிக்கப்பட்ட குடும்ப நபர் ஒருவருக்கு திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் இளநிலை உதவியாளராக முற்றிலும் தற்காலிக அடிப்படையில் பணி நியமனம் வழங்கி ஆணையிடப்படுகிறது.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண் 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள்: 23.01.2020.
2. திருவண்ணாமலை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலஅலுவலரின் கடிதம். ந.க.எண்.18445/2018/கே4, நாள்:12.03.2020.

---0---

**ஆணை**

பார்வை 2–ல் காணும் திருவண்ணாமலை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடிதத்தில், திருவண்ணாமலை மாவட்டத்தில் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு உயிரழந்தவரின் குடும்பத்தில் ஒருவருக்கு வன்கொடுமை தடுப்பு சட்டம் 1989 மற்றும் விதிகள் 1995–ன் கீழ் பின்வரும் நபருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கிட பரிந்துரை செய்ததை தொடர்ந்து பார்வை (1)ல் காணும் அரசாணையின்படி திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் கருணை அடிப்படையில் பின்குறிப்பிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக அரசின் அனுமதி எதிர்நோக்கி கீழ்கண்ட விவரப்படி இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கி ஆணையிடப்படுகிறது.

| வ.எண். | பெயர் மற்றும் விலாசம் | பதவியின் பெயர் மற்றும் பணி நியமனம் வழங்கப்படும் அலுவலகம் |
|---|---|---|
| 1 | திரு.மா.ஆதிகேசவன்,<br>த/பெ.மாதவன்,<br>புளியரம்பாக்கம் கிராமம்,<br>செய்யாறு வட்டம், திருவண்ணாமலை | இளநிலை உதவியாளர்,<br>ஊராட்சி ஒன்றியம்,<br>அனக்காவூர்<br><br>(காலிப்பணியிடம்) |

// பணி நியமனத்திற்கான நிபந்தனைகள் //

1. இவருக்கு ரூ.19500–62000 என்ற ஊதிய நிலையில் (Pay Level) ஊதியம் மற்றும் இதர படிகள் வழங்கப்படும்.

2. இவர் இவ்வுத்தரவு கிடைக்கப் பெற்றவுடன் அரசு மருத்துவ அலுவலரின் உடற்தகுதி சான்று பெற்று பணியில் சேரவேண்டியது.

3. இவர் தன்னுடைய அனைத்து அசல் சான்றுகளையும் பணியில் சேரும் போது அலுவலகத் தலைவரிடம் முன்னிலைப்படுத்த வேண்டும்.

4. இவர் அளித்துள்ள ஆவணங்களில் எவையேனும் தவறு என பின்னர் தெரியவரும் பட்சத்தில் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி பணி நீக்கம் செய்யப்பட்டு காவல் துறை மூலம் குற்றவியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

5. இந்த தற்காலிக நியமனத்தின் பேரில் எந்தவித முன்னுரிமையும் கோர இயலாது.

6. இவர் தன்னுடைய தகுதிகாண் பருவகாலத்திற்குள் (இரண்டு ஆண்டு காலத்திற்குள்) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அலுவலர்களுக்கான அனைத்து தேர்வுகளிலும் தேர்ச்சி பெற வேண்டும்.

7. இவர் தன்னுடைய பாஸ்போர்ட் அளவு புகைப்படம் இரண்டினை மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களிடம் நேரில் கொடுத்து சான்றொப்பம் பெற்று பின் பணியில் சேரும்போது சம்மந்தப்பட்ட அலுவலகத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

8. தனியரின் வேலைவாய்ப்பு பதிவு அட்டையினை அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டியது.

9. அரசாணை நிலை எண்.430, நிதி துறை நாள்: 06.08.2004–ன் படி இவர் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படுவார்.

5/11

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருவண்ணாமலை.

பெறுநர்
திரு.மா.ஆதிகேசவன்,
த/பெ.மாதவன்,
புளியரம்பாக்கம் கிராமம்,
செய்யாறு வட்டம், திருவண்ணாமலை.
– பதிவஞ்சல் ஒப்புதலுடன்

7.7.2020

நகல்: இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை–15.
நகல்: மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், திருவண்ணாமலை.
நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ / கி.ஊ), அனக்காவூர் வட்டாரம்.
நகல்: "பஅ3" இருப்பு கோப்பிற்கு.